SEC/PN/IT/2026/07
29.11.2026

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

வரி செலுத்துவோருக்கான அறிவித்தல்

2025/2026 *மதிப்பீட்டு ஆண்டுக்கான வருமான வரி விபரத்திரட்டைச் சமர்ப்பித்தல்*

2017 ஆம் ஆண்டின் *24* ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, வருமான வரிக்காகப் பதிவு செய்துள்ள அனைத்து நபர்களும் *2025/2026* ஆம் மதிப்பீட்டு ஆண்டிற்கான தமது வருமான வரி விபரத்திரட்டினை *2026* நவம்பர் *30* ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

எவ்வாறாயினும், *2025/2026* ஆம் மதிப்பீட்டு ஆண்டில் முதன்முறையாக வருமான வரி விபரத்திரட்டுகளைச் சமர்ப்பிக்கும் வருமான வரிக்காகப் பதிவு செய்துள்ள நபர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு காரணமாக, *2026* நவம்பர் மாதத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையின் மீது அதிகளவிலான அழுத்தம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, முறைமையில் அதிக நெரிசல் ஏற்பட்டு, வருமான வரி விபரத்திரட்டுகளைச் சமர்ப்பிக்கும் செயற்பாட்டில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன.

இதன் காரணமாக, பல வரி செலுத்துவோர் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் வருமான வரி விபரத்திரட்டுகளைச் சமர்ப்பிப்பதில் சிரமங்களையும் தாமதங்களையும் எதிர்கொண்டுள்ளனர். மேலும், சில வரி செலுத்துவோர் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தமது வருமான வரி விபரத்திரட்டுகளைச் சமர்ப்பிக்க முடியாத நிலையும் ஏற்பட்டிருக்கலாம்.

மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, *2025/2026* ஆம் மதிப்பீட்டு ஆண்டிற்கான தமது வருமான வரி விபரத்திரட்டுகளை *2026* டிசம்பர் *14* ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கும் வரி செலுத்துவோருக்கு எதிராக, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் *XVIIA* மற்றும் *XVIII* ஆகிய அத்தியாயங்களின் கீழ் எவ்வித அபராதங்களும் விதிக்கப்படமாட்டாது என்பதுடன், தவறுதலுக்கான மதிப்பீடுகளும் *(Default Assessments)* பிறப்பிக்கப்படமாட்டாது. மேலும், அவர்களுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படமாட்டாது என்பதும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் வருமான வரிக்காகப் பதிவு செய்யும் வரி செலுத்துவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதுடன், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வருமான வரி விபரத்திரட்டுகளைச் சமர்ப்பிப்பதற்கான வசதிகளை உரிய காலக்கெடுவிற்கு முன்கூட்டியே ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றது. எனவே, எதிர்கால ஆண்டுகளில் வரி செலுத்துவோர் தமது வருமான வரி விபரத்திரட்டுகளை முடிந்தவரை

முன்கூட்டியே சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

பாதிக்கப்பட்ட அனைத்து வரி செலுத்துவோரும் இந்தச் சலுகைக் காலத்தைப் பயன்படுத்தி, தமது வருமான வரி விபரத்திரட்டுகளை உரிய முறையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

TAXES - FOR A BETTER FUTURE